**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025**

**கர்நாடக சங்கீதம்** | **தரம் 11** | **மூன்று மணித்தியாலம்**

அறிவுறுத்தல்:

- **பகுதி I இன் எல்லா** வினாக்களுக்கும் விடை தருக .**பகுதி II** இல் **முதலாம் வினா உட்பட 5** வினாக்களுக்கு விடை தருக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி ( X )** இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி I

1. தகதகிட – என்ற ஜதிச் சொல் குறிப்பது
   1. திஸ்ர நடை 2. சதுஸ்ரநடை 3. கண்டநடை 4. மிஸ்ரநடை
2. பண்டைய காலத்தில் “ இராக கதம்பம்” என அழைக்கப்பட்ட உருப்படி
   1. பதம் 2. இராகமாலிகை 3. கீர்த்தனை 4. கிருதி
3. பஞ்சபுராணத்தில் திருவிசைப்பாவிற்கு அடுத்ததாக சுத்தாங்கமாக பாடப்படுவது
   1. பெரியபுராணம் 3. தேவாரம்
   2. திருவாசகம் 4. திருப்பல்லாண்டு
4. ஆரோகண அவரோகணத்தில் காந்தாரம் , தைவதம் வர்ஜமாக வரும் இராகம்
   1. தோடி 3. பந்துவராளி
   2. ஆரபி 4. மத்தியமாவதி
5. மட்டியதாளத்தில் முன்னால் வரும் லகுவை நீக்கினால் வருவது
   1. ஏகதாளம் 3. அட தாளம்
   2. ரூபகதாளம் 4. துருவ தாளம்
6. $\frac{1}{8}$ எனும் குறியீட்டினால் குறிக்கப்படும் அங்கம்
   1. குரு 3. அனுத்துருதம்
   2. புலுதம் 4. காகபாதம்
7. வாத்தியத்திரயத்தில் மூன்றாவதாக இடம் பெறும் வாத்தியம்
   1. வயலின் 3. வீணை
   2. புல்லாங்குழல் 4. மிருதங்கம்

8. ‘‘அள்ளியுண்டிடலாம்’’ என்ற பந்துவராளிக் கீர்த்தனையின் பல்லவி ஆரம்பிக்கும் தாளத்தின் எடுப்பு

1. அதீதம்
2. சமம்
3. ஆகதம்
4. அநாகதம்

9. தவில் வாத்தியக் குழுவினரால் திருமண நிகழ்ச்சிகளில் தாலி கட்டும் போது எழுப்பப்படும் உரத்த இசை

1. மல்லாரி
2. பெரியமேளம்
3. கெட்டிமேளம்
4. சின்னமேளம்

10. ஸரிகிமபதிநி என்னும் ஸ்வர சங்கேதங்களை எடுத்துக் கொள்ளும் ராகம்

1. கல்யாணி
2. ஷண்முகப்பிரியா
3. கீரவாணி
4. கரஹரப்பிரியா

11. ‘‘ உற்றுமை சேர்வது’’ என்னும் தேவாரம் அருளப்பட்ட தலம்

1. திருப்பிரமபுரம்
2. சீர்காழி
3. திருவாலங்காடு
4. திருவீரட்டானம்

12. பா ; மபாமகரீகாரிஸா என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சர எண்ணிக்கை

1. 12
2. 14
3. 16
4. 18

13. பண் - செம்பாலைக்கு இணையான கர்நாடக ராகம்

1. தோடி
2. கரஹரப்பிரியா
3. ஹரிகாம்போஜி
4. சங்கராபரணம்

14. கனபஞ்சக ராகங்களில் ஒன்று

1. மத்தியமாவதி
2. ஆரபி
3. பிலஹரி
4. ஹம்சத்வனி

15. வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வில்லில் ‘‘விற்கடம்’’ கட்டப்பட்டிருப்பது

1. வில்லின் வலப்பகுதியில்
2. வில்லின் நடுப்பகுதியல்
3. வில்லின் முற்பகுதியில்
4. வில்லின் இடப்பகுதியில்

16. பதம் என்ற உருப்படியை பாடும்போது வெளிப்படும் ரஸம்

1. கருணை
2. வீரம்
3. சிருங்காரம்
4. சாந்தம்

17. ஸமகமரி/ஸரி/கமரீக/ஸாரிகம// என்ற அப்பியாச வரிசையின் அடுத்த ஆவர்த்தனமாக இடம்பெறும் வரிசை

1. ரிகமகரி/ரிக/ரிமகாரி/ரீகமப//
2. ரிபமபக/ரிக/மபகாம/ரீகமப//
3. ரிகமகரி/ரிக/மபகாம/ரீகமப//
4. ரிகமகரி/ரிக/மபரீகி/ரீகமப//

18. ஹிந்துஸ்தானி இசைக்கச்சேரியின் பிரதான தாள வாத்தியம்

1. டொல்கி	3. ஷெனாய்
2. ஸாரங்கி	4. தபேலா

19. 'முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்' என்ற தேவாரத்தைப் பாடியவர்

1. திருநாவுக்கரசர்	3. திருஞானசம்மந்தர்
2. மாணிக்கவாசகர்	4. சுந்தரர்

20. 'லங்கர்'' என்ற பகுதி காணப்படும் வாத்தியம்

1. நாதஸ்வரம்	3. வயலின்
2. தவில்	4. வீணை

21. இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நாடகம்

1.நிருத்திய நாடகம்	3. இசை நாடகம்
2.நாட்டிய நாடகம்	4. ஓரங்கநாடகம்

22. ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல்

1.வர்ஜராகம்	3. வக்ரராகம்
2.பாஷாங்க ராகம்	4.உபாங்கராகம்

23. 'சங்கிரகசூடாமணி' எனும் நூலை இயற்றியவர்

1.ராமாமாத்யர்	3. ஷேத்ரக்ஞர்
2.வெங்கடமகி	4. கோவிந்தாச்சாரியார்

24. " சுந்தரர் சேவை கண்ட நன் சுகிர்தமே சுகிர்தம்" எனும் சரண வரிகளைக் கொண்ட கீர்த்தனை

1.உள்ளமிரங்கி	3.அள்ளி உண்டிடலாம்
2.இனிநமக்கொரு	4.ஸ்ரீராஜ ராஜேஸ்வரி

25. சதுஸ்ர ஜாதி துருவதாளத்தின் அட்சர எண்ணிக்கையைக் கொண்ட தாளம்

1.சதுஸ்ரஜாதி மட்டியதாளம்	3. சங்கீர்ணஜாதி ரூபகதாளம்
2.கண்டஜாதி அடதாளம்	4. கண்டஜாதி ஜம்பை தாளம்

26. நாட்டுப் பாடல் வகைகளைத் தழுவி பாடப்பட்ட பதிகம்

1.திருநேரிசை	3. திருவெம்பாவை
2.திருவம்மானை	4. திருவாசகம்

27. பண்ணிசையில் ஷாடவ இராகத்தைக் குறிக்கும் சொல்

1.பண்	3. திறம்
2.பண்ணியம்	4. திறந்திறம்

28. அப்பியாச கானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி

1.தில்லானா	3. வர்ணம்
2.தேவாரம்	4. கீதம்

29. தமது பெயரையே முத்திரையாகப் பயன்படுத்திய வாக்கேயகாரர்கள்

1.தியாகராஜர் , கோபாலகிருஷ்ண பாரதியார்

2. பாபநாசம்சிவன் , முத்துத்தாண்டவர்

3. தியாகராஜர் , பாபநாசம்சிவன்

4. முத்துத்தாண்டவர் , கோபாலகிருஷ்ணபாரதியார்

30. சங்கீத மும்மூர்த்திகளால் உருவாக்கப்பட்ட இசைப்பீடம்

1.மைசூர் 3. சென்னை

2.திருவனந்தபுரம் 4. தஞ்சாவூர்

31. உத்க்ருஹம் , ஆபோகம் , மேளபாகம் , த்ருவம் எனும் அங்கங்களையுடைய உருப்படி வகை

1.பிரபந்தம் 3. வர்ணம்

2.கீர்த்தனை 4. பதம்

32. எல்லா அங்கங்களுக்கும் சாஹித்யம் காணப்படும் உருப்படி

1.தானவர்ணம் 3. பதவர்ணம்

2.நவராகமாலிகா 4. அடதாளவர்ணம்

33. தேவாரப் பதிகங்ளை பண் முறையில் பாடி பரவச் செய்தவர்கள்

1.ஆழ்வார்கள் 3. ஓதுவார்கள்

2.வைணிகர் 4. வாக்கேயகாரர்

34. பாபநாசம் சிவனால் இயற்றப்பட்ட உருப்படிகளுள் ஒன்று

1.ஸ்ரீராஜராஜேஸ்வரி 3. இனிநமக்கொரு

2.உள்ளமிரங்கி 4. மாயன்குழலிசை

35. ஹிந்துஸ்தானி இசையில் பூர்விதாட் என குறிப்பிடப்படும் இராகம்

1.பந்துவராளி 3. மோகனம்

2.ஹரிகாம்போஜி 4. ஆரபி

36. ‘சந்தப்பாவலர்’ எனப் போற்றப்படுபவர்

1.திருநாவுக்கரசர் 3. திருமூலர்

2.அருணகிரிநாதர் 4. மாணிக்கவாசகர்

37. திரிகூட இராசப்பக் கவிராயாரல் எழுதப்பட்ட இசை நாடகம்

1.இராம நாடகம் 3. அசோகமுகி நாடகம்

2.குற்றாலக்குறவஞ்சி 4. நந்தனார் சரித்திரம்

38. தோஷ நிவர்த்திக்குரிய இராகம்

1.மத்தியமாவதி 3. கல்யாணி

2.மோகனம் 4. ஹரகரப்பிரியா

39. 72 மேள இராகமாலிகையை ஆக்கியவர்

1.மஹாவைத்தியநாதய்யர் 3. சுப்பராமதீஷிதர்

2.இராமஸ்வாமி தீஷிதர் 4. முத்துஸ்வாமி தீஷிதர்

40. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – பல்லவி , அனுபல்லவி முத்தாயிஸ்வரம் , சரணம் ஆகிய அங்கங்களை கொண்டது.

B – எல்லா அங்கங்களுக்கும் சாகித்யம் காணப்படும்.

C – தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும்

D – சௌக்க காலத்தில் அமைந்திருக்கும்.

மேற்கூறியவற்றள் தானவர்ணம் பற்றிய சரியான கூற்றுக்கள்

1. B,C　　2. A,D　　3. A,C　　4. B,D

(1x40=40 புள்ளிகள்)

## பகுதி II

- **பகுதி II** இல் **முதலாம் வினா உட்பட 5** வினாக்களுக்கு விடை தருக.

01.

1. “ரூத்ர – மா” என்ற மேள சங்கேதத்தையுடைய இராகம்?
2. கல் நாதஸ்வரம் காணப்படும் இடம்?
3. பேரின்பப்பதங்களை இயற்றியவர்?
4. தியாகராஜ ஸ்வாமிகள் உருப்படிகளில் வெளிப்படும் ரஸம்?
5. கரஹரப்பிரியாவின் மேள எண்ணை மொத்த அட்சர எண்ணிக்கையாகக் கொண்ட தாளம்?
6. தொகுதிக் கிருதிகளை இயற்றியவர்?
7. கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் எனப் போற்றப்படும் காலப்பகுதி?
8. வாக்கிற்கு அருணாகிரி எனப் போற்றப்படுபவர்?
9. வர்ணத்தின் இரு வகைகள்?
10. பதத்தில் வெளிப்படுத்தப்படும் இரட்டைத் தாற்பரியம் எது?

(1+1+1+1+1+1+1+1+2+2=12 புள்ளிகள்)

02. பின்வரும் இராங்களுள் ஏதேனும் ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (உருப்படிகள் , சஞ்சாரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்)

1. மத்தியமாவதி
2. பந்துவராளி
3. ஹரிகாம்போதி

(6+6=12 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி விரிவான விளக்கம் தருக?

1. ஷடங்கம்
2. பதம்
3. இசைக்குறியீடுகள்

(6+6=12 புள்ளிகள்)

04.
1. "நான்முகன்" என அழைக்கப்படும் வாத்தியம் எது?
2. அவ் வாத்தியத்தின் இரு பிரிவுகளும் எவை?
3. அவ் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.
4. அவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
5. அவ் வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யமடைந்த இருவரின் பெயர்களைத் குறிப்பிடுக.

(1+2+3+4+2=12 புள்ளிகள்)

05. தியாகராஜரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1. பிறந்த இடமும்
2. வாழ்ந்த காலப்பகுதி
3. அவரது இளமைக்கல்வி
4. அவரது இசைத்தொண்டு
5. இவா் இயற்றிய கோவூா் பஞ்சரத்தினங்கள்

(1+1+2+4+4=12 புள்ளிகள்)

06. பின்வரும் அலங்காரத்தின் இராகம் , தாளம் , ஆரோகண , அவரோகணம் அட்சர எண்ணிக்கை என்பவற்றைக் குறிப்பிடுக. அலங்காரத்தை முழுமையாகப் பூர்த்தி செய்க.

| $l_5$ | $l_5$ | o | o |
|---|---|---|---|
| கமாபா / | காமபா/ | தா/ | தா// |

(1+1+2+1+7=12 புள்ளிகள்)

07. இந்தியாவின் கா்நாடக இசைவரலாற்றில் 14ம் 15ம் நூற்றாண்டுகளின் இசைப் பின்னணி பற்றி ஆராய்க. (12புள்ளிகள்)

அல்லது

சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதத்தினால் 35 தாளங்களாக உருவாகும் முறையினை விளக்குக.

(துருவ தாளம் , ஜம்பை தாளம் என்பன ஜாதி பேதமடையும் முறையினை உதாரணமாக கொண்டு விளக்குக.

(2+3+7=12 புள்ளிகள்)